1968 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட அமைச்சர் அவர்கள் விரும்பினுல், இதற்குப் பதில் சொல்லலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்தக் கேள்விக்கு அப்பாற்பட்ட உண்மையை மறைக்கக்கூடிய தன்மையில் நியாய மாக நேர்மையாக நடக்கிறது என்று அங்கத்தினர் சொன்ன காரணத்திஞல்தான், நான் நேர்மையற்ற தன்மையில் அது நடக் கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துக்கூறக்கூடிய தன்மையில்தான் அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பாக்கி இருக்கிறதா என்பது கேள்வி. இல்லை என்பது பதில். ஊழலாக இருக்கிறது என்று பொதுவாகச் சொல்வது நல்லதல்ல. அப்படிப்பட்ட தவறு நடந்திருக்கிறது என்பதுபற்றி தகவல் எழுதியனுப்பினுல், அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

பழம் பதனிடும் தொழிற்சாலை

*68 விஞ.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் பழம் பதனிடும் தொழிற் சாலை நிறுவுவதற்கென கடனுகை வழங்கப்பட்ட தொகை என்ன?

(இ) தற்போது எந்த அளவுக்கு அத்தொழிற்சாலை செயல் படத் தொடங்கியுள்ளது?

(உ) அதனிடமிருந்து மேலும் கடன் கோரி விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) பழம் பதனிடும் தொழிற் சாலை நிறுவுவதற்காக, அரசாங்கம் வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கல் விற்பனைச் சங்கத்திற்கு ரூ. 2,83,700 மூலதனப் பங்குத் தொகையோடு ரூ. 5,67,400 கடனுகவும் வழங்கியுள்ளது.

(இ) இத் தொழிற்சாலை இன்னும் உற்பத்தியைத் தொடங்க வில்லை.

(உ) இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அந்தத் தொழிற்சாலைக்கு இடங்கள் வாங்கப்பட்டது, எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது? அது சம்பந்தப்பட்ட பத்திரம் முதலியவற்றை அரசாங்கம் பரிசீலித்த தா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த இடம் மட்டும் 1,22,566 ரூபாய். அந்த இடத்திற்குப் பத்திரத்தையும் பார்த்தாகிவிட்டது. கனம் அங்கத்தினர் சொல்கிறபடி தவறுகள் இருக்கின்றன என்ற தகவல்கள் இருக்குமாஞல், அதை எழுதியனுப்பலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வட ஆர்க்காடு பழம் பதனிடும் தொழிற்சாலையைப்பற்றி திரு. முருகையன் அவர்கள் துணை வினா கேட்பார்கள்.

திரு. எஸ். முருகையன் : அந்த இடத்தைப்பற்றிய தவறுகள் பற்றிய தகவல்கள் இருந்தால் சொல்லலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இடம் கோயிலுக்குச் சொந்தமான இடம். சம்பந்தப்பட்ட இடத்தை வேறு யாரோ ஒருவரிடமிருந்து தப்பாக பத்திரத்தை எழுதி வாங்கியிருக்கிறார்கள். இப்பொழுது அந்த இடத்தைச்சுற்றி காம்பவுண்ட் போடப்பட்டு, அங்கே கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் எல்லாம் அதை ஆட்சேபிக்கிறார்கள். சட்டத்திற்கு விரோதமாகத்தான் இந்த இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இந்த அரசு இதைப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

குடி நீர் விநியோகத் திட்டங்கள்

*69 வினா.—**திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், குறிச்சி பஞ்சாயத்தில் பொது குடி தண்ணீர் விநியோகத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) இத்திட்டம் எப்போது துவங்கப்பட்டது?

(உ) இத்திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். சாதிக் பாட்சா: (அ) குறிச்சி பஞ்சாயத்து குடி தண்ணீர்த் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 15,06,000.

(இ) இத்திட்டம் இன்னும் துவங்கப்படவில்லை.

(உ) இத்திட்டத்திற்கான விரிவான அமைப்புப் படங்களும், மதிப்பீடுகளும் தயாராகின்றன.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, குறிச்சி பஞ்சாயத்துப் பகுதி கோவை நகரத்தையொட்டி ஐந்தாறு மைல்கள் தூரத்தில் இருக்கிற காரணத்தினால், குடி நீர் இல்லாது மக்கள் குடிநீருக்காக தாய்மார்கள் இரண்டு மூன்று மைல்கள் எல்லாம் நடந்து சென்றும், தொழிலாளர்கள் எல்லாம் சைக்கிளிலே சென்றும் தண்ணீர் எடுத்துப்போகக்கூடிய கடுமையான சூழ்நிலை அங்கே இருப்பதால், மேற்படி திட்டத்தை விரைவிலேயே நடைமுறைக்குக் கொண்டுவந்து மக்கள் பயன்படுத்தக்கூடிய முறையில் எப்பொழுது அமல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விரைவாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.